இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 06-12-2024


# சாத்தனூரும் செம்பரம்பாக்கமும்

சாத்தனூர் அணையில் படிப்படியாக நீர் வரத்து அதிகரித்து வரும் போதே வெள்ள அறிவிப்பை வெளியிட்டிருக்க வேண்டும் என்றும், திடீரென திறந்து விட்டார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி சொல்லி இருக்கிறார். இவரெல்லாம் எந்த லட்சணத்தில் பொதுப்பணித் துறையை ஒரு காலத்தில் கவனித்திருப்பார் என்பதை நினைத்தால் வேதனையாக இருக்கிறது. ஏதாவது வாய்க்கு வந்ததை உளற வேண்டும் என்பதற்காக அவர் உளறிக் கொண்டிருக்கிறார். சிந்தனைக் குறைபாடு கொண்ட சில கட்சிகளின் பிரமுகர்களும் இதனைச் சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் இதற்கான விளக்கத்தை மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார். சாத்தனூர் அணைக்குத் தொடர்ந்து நீர் வரத்து அதிகரித்ததை முன்கூட்டியே கணித்து அணையின் பாதுகாப்பைக் கருதி தென் பெண்ணை ஆற்றில் தண்ணீர் வெளியேற்றப் பட்டது. இதனை வைத்து பொய் சொல்வதற்கு பழனிசாமிக்கு ஒரு அளவு வேண்டாமா?

**★ நீர் வரத்து அதிகமான நிலையை முன்கூட்டியே கணித்து 5 முறை வெள்ள அபாய எச்சரிக்கைகள் விடப்பட்டன.**

**★ நீர் வெளியேற்றப்படும் போது கரைகளிலுள்ள கிராமங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அபாய எச்சரிக்கை தரப்பட்டது.**

**★ முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.**

**★ வெள்ளம் வெளியேறும் போது நெடுஞ்சாலை வாகனப் போக்குவரத்துகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.**

**★ அணையில் இருந்து மிக அதிக அளவாக 1.80 லட்சம் கன அடி நீர் திறந்து விடாமல் போயிருந்தால் அணைக்குப் பெரிய ஆபத்து ஏற்பட்டு இருக்கும்.**

**★ அணைக்குப் பாதிப்பு ஏற்பட்டால் 7 டி. எம்.சி. நீரும் வெளியேறி இருக்கும்.**

**★ முன்கூட்டியே எச்சரிக்கை செய்ததால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. என்ற விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தெளிவு படுத்தி இருக்கிறார்கள். இவை எல்லாம் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராகவும் இருந்த பழனிசாமிக்குப் புரியாமா எனத் தெரியவில்லை.**

2015-ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த கடும் மழையால் ஏரிகள் நிரம்பி, வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சென்னை வெள்ளத்தில் 289 பேர் பலியானார்கள். 23.25 லட்சம் வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டன. சென்னை மாநகரமே பல நாட்களுக்கு முடங்கிப்போனது. முன்னறிவிப்பு இல்லாமல் செம்பரம்பாக்கம் ஏரியைத் திறந்துவிட்டு பலரை மூழ்கடித்தனர். 'செம்பரம்பாக்கத்தை திறந்து விட முதலமைச்சர் ஜெயலலிதா விடம் அனுமதி வாங்கவே எங்களுக்கு இரண்டு நாள் ஆனது. அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை' என்று அதிகாரிகள் சொன்னதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டது.

அந்தப் பேரிடரை எதிர் கொண்டதில் அ.தி.மு.க. அரசின் லட்சணத்தை போஸ்ட் மார்ட்டம் செய்தது சி.ஏ.ஜி. என்ற இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத்துறை. '2015-ம் ஆண்டு சென்னையில் வெள்ளம் பாதிப்பு ஏற்படக் காரணம் மனிதத் தவறே காரணம். தனியார் நிலத்தைப் பாதுகாக்கவே செம்பரம்பாக்கம் ஏரி திறக்கப்பட்டது' என கண்டறிந்தது சி.ஏ.ஜி. அ.தி.மு.க. ஆட்சியின் அலட்சியத்தால் 289 மனித உயிர்கள் பலியானது.

**2018ல் ஏற்பட்ட கஜா புயலையும் சரியாக எதிர்கொள்ளவில்லை பழனிசாமி. காவிரி டெல்டாவில் 12 மாவட்டங்கள் பாதிப்பு, 63 பேர் பலி, 3.42 லட்சம் வீடுகள் சேதம், பல்லாயிரக்கணக்கில் மரங்கள் சாய்ந்தன. ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழப்பு என கஜா புயல் புரட்டிப்போட்ட வடுக்கள் அதிகம்.**

**"முதல்வர் பழனிசாமி ஏன் போகவில்லை" என விமர்சனங்கள் எழுந்த பிறகே அங்கு எடப்பாடி பழனிசாமி போனார். புதுக்கோட்டை மாப்பிள்ளையார்குப்பம், தஞ்சை சூரப்பள்ளம் இடங்களுக்குச் சென்று ஆளும் கட்சிக்காரர்கள், போலீஸார் புடைசூழ, கடுமையான பாதுகாப்பு வளையத்துக்குள் இருந்தபடியே சிலருக்கு மட்டும் நிவாரண உதவிகளை வழங்கிவிட்டுத் திரும்பினார். புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்குச் செல்லாமல் பாதியில் திரும்பினார் பழனிசாமி. திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களின் மண்ணில் கால்கள்கூட பதியாமல் ஹெலிகாப்டரில் எட்ட நின்று பார்த்ததோடு கடமை முடிந்தது என நிறுத்திக் கொண்டார்.**

'கஜா புயல் கரையைக் கடக்கும்' எனத் தேதி குறிக்கப்பட்ட தினத்தில், சேலத்தில் எடப்பாடிக்குப் பரிவட்டம் கட்டித் கொண்டிருந்தார்கள். சேமூர் அம்மா பாளையத்தில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் மாமனார் வீட்டு விருந்திலும் கோவில் விழாவிலும் கலந்து கொண்டார். சேமூர் செல்லும் சாலை முழுக்க ஃபிளெக்ஸ் பேனர்கள். 'வா மருமகனே', 'எங்கள் ஊரு மருமகனே' என வரவேற்பு பதாகைகள் வைக்கப்பட்டு இருந்தது. டெல்லியில் தனியார் நிகழ்ச்சிக்கு பங்கேற்கச் சென்ற பழனிசாமி, அப்படியே பிரதமரையும் சந்தித்து மனுக் கொடுத்து விட்டு வந்தார்.

2017 நவம்பரில் தாக்கிய ஒகிப் புயலால் நிலைகுலைந்து போனது கன்னியாகுமரி. மீன்பிடி படகுகளும் மீனவர்களும் நிர்மூலமானார்கள். அப்போது ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் அ.தி.மு.க.வை வெற்றி பெற வைக்க உழைத்துக் கொண்டிருந்தார் பழனிசாமி. "மீனவர்களை மீட்டுத்தரக் கோரி போராட்டம் நடைபெறும்" என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த, 14 நாட்கள் கழித்து கன்னியாகுமரிக்கு அவசரமாக ஓடினார் எடப்பாடி. மீனவர்கள் மீட்க நடவடிக்கை எடுக்காததால் அன்றைய ஒன்றிய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணனை மீனவர்கள் முற்றுகையிட்டனர். அப்படி எதுவும் தனக்கு நடந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு இடத்தில் திரட்டி அமர்த்தப்பட்ட மீனவர்களிடம் எடப்பாடி பழனிசாமி சம்பிரதாயமாக ஆறுதல் சொன்னார்.

**எடப்பாடி கன்னியாகுமரிக்கு போனபோது எதிர்ப்பு தெரிவித்து கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டன. "சாவுக்கு வரவில்லை... காரியத்திற்கு வருகிறாரா முதலமைச்சர் பழனிசாமி" என்று பேனர்கள் வைத்தார்கள் மீனவர்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லாமல் அ.தி.மு.க. நிர்வாகிகளால் மண்டபத்திற்கு வரவழைக்கப்பட்டவர்களிடம் ஒரு நாடகத்தை நடத்திவிட்டு வந்தார் எடப்பாடி. ஆனால் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கன்னியாகுமரியின் ஆறு சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 35 கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் சொன்னார்கள்.**

இதை எல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்துத் தான் வாய்ச் சவடால் பேட்டிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

●●

---



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.12. 2024) தலைமைச் செயலகத்தில், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலை குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஷ் அகமது மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### 2024 ஆம் ஆண்டிற்கான இந்திய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழாவில்

# தமிழ்நாட்டிற்கு 'விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்' விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் விருதைக் காண்பித்து – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துப் பெற்றார்!

சென்னை, டிச. 6 -

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.12.2024) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, புதுதில்லியில் 30.11.2024 அன்று நடைபெற்ற இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு சார்பில் FICCI Turf 2024 14வது சர்வதேச விளையாட்டு கருத்தரங்கில் 2024ஆம் ஆண்டிற்கான இந்திய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழாவில், விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாக (Best State Promoting Sports) தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, அதற்கென வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்து பெற்றார்.**

விளையாட்டுத் துறையில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், உயரிய ஊக்கத்தொகை வழங்குதல், விளை யாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

**விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வரும் முனைப்பான நடவடிக்கைகள்**

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இது வரை, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் வீராங்கனைகள் உள்ளிட்ட 3,345 வீரர் வீராங்கனைகளுக்கு ரூ.104.22 கோடி உயரிய ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் 12,525 கிராம பஞ்சாயத்துகளுக்கு ரூ.85.99 கோடி செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் விளையாட்டு உட்கட்டமைப்புகளை மேம்படுத்திடும் வகையில், கோபாலபுரத்தில் குத்துச்சண்டை அகாடமி, மதுரையில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் ரூ.8.25 கோடியில் செயற்கை இழை ஓடுதளப்பாதை மறுசீரமைப்பு, இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் ரூ.50 இலட்சத்தில் பளுதூக்கும் பயிற்சி மையம், தமிழ்நாட்டில் 9 சட்டமன்ற தொகுதிகளில் சிறு விளையாட்டு அரங்கம், தூத்துக்குடி மாவட்டம். கோவில்பட்டியில் ரூ.7 கோடியில் வளைகோல்பந்து விளையாட்டு வீரர்களுக்காக முதன்மை நிலை விளையாட்டு மையம், செங்கல்பட்டு மாவட்டத்தில் ரூ.15 கோடியில் மாவட்ட விளையாட்டு வளாகம், சேலம் மாவட்டத்தில் ரூ.20 கோடியில் பல்நோக்கு விளையாட்டு வளாகம், தென்காசி மாவட்டத்தில் உள்ள பட்டக்குறிச்சி கிராமத்தில் ரூ.15 கோடியில் மாவட்ட விளையாட்டு வளாகம் போன்ற பல்வேறு வசதிகளை அமைத்து வருகிறது.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை (TN Champions Foundation) மூலம் 585 விளையாட்டு வீரர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும், உயர்நிலைப் போட்டிகளில் பங்கேற்றல் மற்றும் மருத்துவச் செலவு உட்பட பல்வேறு செலவினங்களுக்கும் ரூ. 13.33 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு விளையாட்டினை ஊக்குவிக்க மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு போட்டிகளை நடத்தி வருகிறது. குறிப்பாக, 44வது செஸ் ஒலிம்பியாட், சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் (WTA), ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023, ஆசிய ஆடவர் ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி 2023, சென்னை செஸ் கிராண்ட்மாஸ்டர்ஸ் 2023, கேலோ இந்தியா இளையோர் விளையாட்டு போட்டிகள் 2023, ATP சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி, தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன்ஷிப்2024, சென்னை ஃபார்முலா 4 ரேசிங் சர்க்யூட் 2024, முதலமைச்சர் கோப்பைகள், 76வது தேசிய டிராக் சைக்கிளிங் சாம்பியன்ஷிப் 2024 போன்ற பல்வேறு போட்டிகளை நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**முன்னோடி மாநிலம்!**

இவ்வாறு தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையை மேம்படுத்திடவும், விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால், விளையாட்டுத் துறையில் தமிழ்நாடு நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது.

இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு (FICCI) இந்தியாவின் விளையாட்டினை மேம்படுத்தி வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது, இந்தியாவின் விளையாட்டு திறன், தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயர்த்துவதை உறுதி செய்ய, மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு, முதலீடு போன்றவற்றில் FICCI பங்களிக்கிறது. மேலும், விளையாட்டில் புதுமை மற்றும் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

தமிழ்நாடு அரசு முன்னெடுத்து வரும் பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு நடவடிக்கைகளால் இந்திய விளையாட்டு விருதுகள் 2024இல், விளையாட்டுகளை ஊக்குவிப்பதில் தமிழ்நாட்டின் சிறந்த பங்களிப்பை FICCI அங்கீகரித்து, "விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்" என்ற விருதை தமிழ்நாட்டிற்கு வழங்கியுள்ளது. இவ்விருதை FICCI விளையாட்டு குழு மற்றும் ஜி.எம்.ஆர் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் தலைவர் பி.கே.எஸ்.வி.சாகர் மற்றும் FICCI விளையாட்டு குழுவின் இணை தலைவர் முனைவர் அமித் பல்லா ஆகியோர் வழங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மற்றும் தமிழ்நாடு விளையாட்டுத் மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்களிடம் விருதினை காண்பித்து வாழ்த்து பெற்ற நிகழ்வில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உள்ளனர்.

---

# "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலை குழுக் கூட்டம்!

## முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது

சென்னை, டிச. 6-

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.12.2024) தலைமைச் செயலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் அனுமதி வழங்கிடும் உயர்நிலை குழுக் கூட்டம் நடைபெற்றது.**

முதலமைச்சர் அவர்கள் 07.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி எண்.110ன் கீழ் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தினை அறிவித்தார்கள். இதுகுறித்து முதலமைச்சர் அவர்கள் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் 22.08.2022 அன்று எழுதிய கடிதத்தில் அவர்களது தொகுதிகளில் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத 10 முக்கிய கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டச் செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான அரசாணை 28.09.2022 அன்று வெளியிடப்பட்டது. அதன்படி மாவட்ட ஆட்சியர் தலைமையிலான சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான குழு சட்டமன்ற உறுப்பினர்களிட மிருந்து பெறப்பட்ட கோரிக்கை களை ஆய்வு செய்து பணிகளை அரசுக்கு பரிந்துரை செய்தது. பரிந்துரைக்கப்பட்ட பணிகள் சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டு அனைத்து துறைகளிடமிருந்தும் இது தொடர்பான விரிவான அறிக்கைகள் பெறப்பட்டன.

கடந்த 2023-24ம் ஆண்டில் 7.10.2023 அன்று முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அனுமதி வழங்கிடும் உயர்நிலைக் குழு கூட்டத்தில் ரூ.10968.65 கோடி மதிப்பீட்டில் 786 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு அவற்றில் 748 பணிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டு, அதில் 233 பணிகள் நிறை வேற்றப்பட்டும் 515 பணிகள் நடைபெற்றும் வருகின்றன. மீதம் உள்ள 38 பணிகளுக்கு ஆணை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2024-25ம் ஆண்டுக்கான பணிகளை தேர்வு செய்திடும் குழு கூட்டம் தலைமைச் செயலாளர் தலைமையில் 10.10.2024 அன்று நடைபெற்றது. அதனை தொடர்ந்து, அனுமதி வழங்கிடும் உயர்நிலைக் குழு கூட்டம் முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (04.12.2024) நடைபெற்றது. இக்கூட்டத்தில் நடப்பாண்டில் ரூ.3555.53 கோடி மதிப்பீட்டில் 483 பணிகளுக்கு நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் இணைத்து செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நிதி மற்றும் சுற்றுசூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர். தாரேஸ் அகமது, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# நூலகத் துறையில் - 446 ஊர்ப்புற நூலகங்களுக்கு 3ஆம் நிலைப் பதவி உயர்வு!

## முதலமைச்சருக்கு பாராட்டு விழா! அமைச்சர்கள் தங்கம் தென்னரசு – அன்பில் மகேஸ் பொய்யாமொழி பங்கேற்பு!

*சென்னை, டிச. 6-*

*சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் நூலகத் துறையின் சார்பில் 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு 3-ம் நிலைப் பதவி உயர்வு வழங்கியமைக்காக நன்றி தெரிவித்தல் மற்றும் பாராட்டு விழா நடைபெற்றது. நிதி மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார்கள்.*

**அமைச்சர் தங்கம் தென்னரசு**

*"நூலகத் துறையின் சார்பில் 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு 3-ம் நிலைப் பதவி உயர்வு வழங்கியமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தல் மற்றும் பாராட்டு விழாவில் பங்கேற்றதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். பள்ளிக்கல்வித் துறைக்குத் தான் நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு உள்ளது. அதில் நூலகத்துறைக்கு அறிவுசார் சமுதாயத்தை உருவாக்கும் மிக முக்கியமான பொறுப்பு உண்டு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறைக்கும் நூலகத்துறைக்கும் மிக முக்கிய இடத்தை வழங்கி அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள் உள்ளார்கள்.*

*மதுரையில் சிறப்புமிக்க நூலகத்தை அமைத்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள். அதுபோன்று கிராமப்புற நூலகங்களும் தற்போது மேம்படுத்தப்பட்டு வருகின்றது. நூலகர்களின் கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்து நிறைவேற்றிடும் வகையில் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப் படும். திராவிட மாடல் அரசு 446 நூலகர்களுக்கு பதவி உயர்வு வழங்கி சிறப்பித்துள்ளது. எனவே, நூலகங்களும் நன்றாக இருக்க வேண்டும், நூலகர்களும் நன்றாக இருக்க வேண்டும் என பல்வேறு திட்டங்களை அரசு அறிவித்து வெகு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. நூலகர்களுக்கு பொற்காலமாக திராவிட மாடல் அரசு உள்ளது. பதவி உயர்வு பெற்ற உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துக் களைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என பேசினார்.*

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

*"நூலகத் துறையின் சார்பில் 446 ஊர்ப்புற நூலகர்களுக்கு 3-ம் நிலைப் பதவி உயர்வு வழங்கியமைக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்தல் மற்றும் பாராட்டு விழாவில் பங்கேற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன்."*

*நூலகர்களின் கோரிக்கை அனைத்தும் தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும். கிராமப்புற நூலகர்கள் நகர்ப்புற நூலகர்கள் என்ற பாகுபாடு யின்றி அனைவரையும் சமமாகத் தான் தமிழ்நாடு அரசு பார்க்கிறது. நூலகர்கள் நூலகத்தில் உள்ள புத்தகங்களை தாங்கள் பெற்றக் குழந்தைகள் போலவே பாதுகாப்பாக பாதுகாக்கிறார்கள். நூலகத்தை வளர்க்க வேண்டும் என்பதற்காக இலக்கியத் திருவிழா, இளைஞர்களுக்கான இலக்கியத் திருவிழா, மாவட்டங்களில் தலா பத்து நாட்கள் வீதம் 38 மாவட்டங்களிலும் புத்தகத் திருவிழா நடத்தப்பட்டு ரூபாய் 69 கோடி மதிப்பில் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.*

*பொருநை, வைகை, காவேரி, சிறுவாணி, சென்னை என இலக்கியத் திருவிழாக்களை நடத்தி வருகிறோம். அறிவு சார்ந்த சமுதாயத்தை படைத்திட என்னவகையான தேவை என்பதை உணர்ந்து நூலகர்கள் புத்தகத்தை வாங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறார்கள். திராவிட மாடல் அரசை தலைமையேற்று நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வரும்போதெல்லாம் நூலகர்களின் பதவி உயர்வுக்குத் துணையாக இருக்கிறார்கள். தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் உங்கள் கோரிக்கைகளை கவனமுடன் பரிசீலித்து நிறைவேற்றிடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு கொண்டு செல்வார்கள். பதவி உயர்வு பெற்ற நூலகர்களுக்கு இந்நாள் மிகவும் முக்கியமான நாள். செய்த பணிக்கு அங்கிகாரம் கிடைத்த நாள், அனைவருக்கும் என் வாழ்த்துக் களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன் என கூறினார்.*

*இவ்விழாவில் இணை இயக்குநர், பொது நூலக இயக்ககம் ச.இளங்கோ சந்திரகுமார், தலைவர் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு மனுஷ்யபுத்திரன், பொதுச்செயலாளர் TNAPNPK C&D கே.தீனதயாளன், மாநிலத் தலைவர் TNAPNPK மு.ராஜேஷ்குமார், மாநில பொருளாளர் TNAPNPK ஆ. சுமதி மற்றும் நூலகர்கள் கலந்துகொண்டனர்.*

---

### நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்து

# சீர்மரபினர் சமுதாய மக்கள் பயனடைவீர்!

## சீர்மரபினர் நல வாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி வேண்டுகோள்!

*சென்னை, டிச.6-*

*சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுவது குறித்து வாரிய துணைத்தலைவர் இராசா அருண்மொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி அமைச்சர் பெருமக்கள் கே. கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோரின் வழிகாட்டுதல்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் சீர்மரபினர் நலவாரிய துணைத்தலைவர் இராசா*



*அருண்மொழி ஆகியோரின் சீரிய முயற்சியால் விருதுநகர் மாவட்டத்தில் சீர்மரபினர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைக்கான சிறப்பு முகாம்கள் நடைபெற இருக்கிறது.*

*முதற்கட்டமாக இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் டிசம்பர் 14ம் தேதியும், அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் டிசம்பர் 21ம் தேதியும், திருச்சுழி சட்டமன்றத் தொகுதியில் டிசம்பர் 28ம் தேதியும் நடைபெற இருக்கிறது.*

*இராஜபாளையம் சட்ட மன்றத் தொகுதியில் டிசம்பர் 14ம் தேதி*

*சம்மந்தபுரம்- தேவர் திருமகனார் கலையரங்கம்*

*திரௌபதியம்மன் கோவில் தெரு - பசும்பொன் தேவர் கலையரங்கம்*

*சொக்கர் கோவில் - மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமண மண்டபம்*

*சேத்தூர் - பசும்பொன் தேவர் கலையரங்கம்*

*செட்டியார்பட்டி - வீராசாமி நாயுடு பள்ளி*

*அயன்கொல்லங்கொண்டான் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி*

*ஆகிய இடங்களில் நடைபெற இருக்கிறது.*

*கல்வியில், பொருளாதாரத்தில் மேம்பாடு அடைவதற்கான முயற்சியில் பங்கேற்று இவ்வாய்ப்பினை பயன்படுத்தி சீர்மரபினர் சமுதாய மக்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைய கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சீர்மரபினர் நல வாரிய துணைத் தலைவர் இராசா அருண்மொழி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*